# மே– 30 – வியாழன்

**உலகெங்கும் வாழ்வோரே! அனைவரும் ஆண்டவரை ஆர்ப்பரித்துப் பாடுங்கள்! திபா. 98:4**

## முதல் வாசகம் : திருத்தூதர் பணி18 : 1 – 8

அந்நாட்களில் பவுல் ஏதென்சை விட்டுக் கொரிந்துக்குப் போய்ச் சேர்ந்தார்.அங்கே போந்துப் பகுதியில் பிறந்த அக்கிலா என்னும் பெயருடைய ஒரு யூதரையும் அவர் மனைவி பிரிஸ்கில்லாவையும் கண்டு அவர்களிடம் சென்றார். அவர்கள், ”யூதர் அனைவரும் உரோமை நகரத்தை விட்டு வெளியேற வேண்டும்” என்ற கிலவுதியு பேரரசருடைய கட்டளைக்கு இணங்கி இத்தாலிய நாட்டைவிட்டு அண்மையில் அங்கு வந்திருந்தார்கள்.கூடாரம் செய்வது அவர்களது தொழில். தாமும் அதே தொழிலைச் செய்பவராதலால் பவுல் அவர்களிடம் தங்கி வேலை செய்துவந்தார்.ஒவ்வொரு ஓய்வுநாளும் அவர் தொழுகைக் கூடத்தில் யூதரிடமும் கிரேக்கரிடமும் பேசி அவர்கள் நம்பிக்கை கொள்ளச் செய்தார்.சீலாவும் திமொத்தேயுவும் மாசிதோனியாவிலிருந்து வந்தபோது பவுல் இறைவாக்கை அறிவிப்பதில் ஆர்வத்தோடு ஈடுபட்டிருந்தார் “இயேசுவே மெசியா என்று யூதரிடம் சான்று பகர்ந்துவந்தார்.அவர்கள் அதனை எதிர்த்துப் பழித்துரைத்தப்போது அவர் தமது மேலுடையிலிருந்த தூசியை உதறி, ”உங்கள் அழிவுக்கு நீங்களே பொறுப்பு, நான் அல்ல. இனிமேல் நான் பிற இனத்தாரிடம் செல்கிறேன்” என்று கூறினார். அவ்விடத்தை விட்டுவிட்டுக் கடவுளை வழிபடும் தீத்து யுஸ்து என்னும் பெயருடைய ஒருவரின் வீட்டுக்குப் போனார். அவரது வீடு தொழுகைக் கூடத்தை அடுத்து இருந்தது.தொழுகைக்கூடத் தலைவரான கிறிஸ்பு என்பவர் தம் வீட்டார் அனைவரோடும் ஆண்டவரிடம் நம்பிக்கை கொண்டார். கொரிந்தியருள் பலரும் பவுல் கூறியவற்றைக்கேட்டு கொண்டு திருமுழுக்குப் பெற்றனர்.

**பதில்பாடல் :** பிற இனத்தார் முன், ஆண்டவர் தம் நீதியை
வெளிப்படுத்தினார்.

## நற்செய்தி : யோவான் 16 : 16 – 20

”இன்னும் சிறிது காலத்தில் நீங்கள் என்னைக் காணமாட்டீர்கள் மீண்டும் சிறிது காலத்தில் என்னைக் காண்பீர்கள். ” அவருடைய சீடருள் சிலர், ””இன்னும் சிறிது காலத்தில் நீங்கள் என்னைக் காணமாட்டீர்கள் மீண்டும் சிறிது காலத்தில் என்னைக் காண்பீர்கள்” என்றும் ”நான் தந்தையிடம் செல்கிறேன்” என்றும் சொல்லுவதன் பொருள் என்ன?” என்று தங்களிடையே பேசிக்கொண்டனர்.”இந்தச் ”சிறிது காலம்” என்பது என்ன? அவர் பேசுவது நமக்குப் புரியவில்லையே” என்றும் பேசிக் கொண்டனர்.அவர்கள் தம்மிடம் கேள்வி கேட்க விரும்பவதை அறிந்த இயேசு அவர்களிடம் கூறியது”இன்னும் சிறிது காலத்தில் நீங்கள் என்னைக் காணமாட்டீர்கள் மீண்டும் சிறிது காலத்தில் என்னைக் காண்பீர்கள்” என்று நான் சொன்னதைப் பற்றி உங்களிடையே சிந்தித்துக் கொண்டிருக்கிறீர்கள்.உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன் நீங்கள் அழுவீர்கள், புலம்புவீர்கள் அப்போது உலகம் மகிழும். நீங்கள் துயருறுவீர்கள் ஆனால் உங்கள் துயரம் மகிழ்ச்சியாக மாறும்.

**தியானம் :** இந்த உலகத்தில் வாழ்கின்றபோது எதிர்காலத்தை நினைத்தோ அடுத்த உலகத்தை நினைத்தோ நாம் கவலை கொள்ள தேவையில்லை. இந்த உலகம் உண்மையானது இந்த நிமிடம் உண்மையானது அதில் மகிழ்ச்சியாக வாழ வேண்டும். எதிர்காலத்தை நினைத்து வீணாகக் கவலைப்படக்கூடாது என்று சொல்வார்கள். இன்றைய நற்செய்தியில் இயேசுவின் வார்த்தைகளை நாம் தியானிக்கும் போது யூதர்களை நினைவுக்கு கொண்டு வருகின்றது. அவர்களைப் பொறுத்தவரையில் இந்த உலகத்தைப் பற்றிய பார்வை இரண்டு பிரிவாக உள்ளது. இந்த உலகம் தீய ஆவியின் பிடியில் இருக்கின்றது என்றும் நாம் மகிழ்ச்சியாக வாழக்கூடிய எதிர்காலம் ஒன்று இருக்கின்றது என்றும் நம்பினார்கள். அந்த எதிர்கால வாழ்விற்கான தயாரிப்பு தான் நாம் வாழ்கின்ற வாழ்வு. எனவே நிகழ்காலத்தில் துன்பங்கள் பாடுகள் இருந்தாலும் அதைப்பற்றி கவலைப்படாமல் எதிர்காலத்தில் நாம் கொள்ள இருக்கின்ற பேரின்பத்தை மனதில் நிறுத்தி வாழ இது நமக்கு அழைப்புவிடுகின்றது. நம் வாழ்வில் துன்பமோ இன்பமோ நம் இயேசு எந்நாளும் நம்மோடு இருக்கின்றார் என்கின்ற செய்தியை இந்த பகுதி நமக்கு தருகின்றது. நம் வாழ்வில் வருகின்ற எத்தகைய துன்பங்களிலிருந்தும் நம்மைக் காக்க வல்லவர் நம் ஆண்டவர் இயேசு இருக்கின்றார் என்பதை முழுமையாக நம்புவோம் ஆமென்.